https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

15th OCTOBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 49





## ஜனாதிபதி வேட்பாளர் ரணிலா? தம்மிக்கவா?

# மொட்டுக்குள் இழுபறி

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரைத் தெரிவு செய்யும் போட்டி ஒன்று மொட்டு கட்சிக்குள் தொடங்கியுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு தரப்பும் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவாக இன்னொரு தரப்பும் மொட்டுக்குள் களமிறங்கியுள்ளன.

மொட்டுக்குள் நிமல் லான்சா உருவாக்கி 02



## நாமல் எதிர்கட்சித் தலைவர்?

நாமல் ராஜபக்ஸவை எதிர்கட்சித் தலைவராக்க வேண்டும் என்று மொட்டு கட்சி எம்பிக்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர்.

கட்சியை கட்டியெழுப்புவதென்றால் இவ்வாறானதொரு தீர்மானம் எடுப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அக்கட்சி எம்பிக்கள் 02


## பட்ஜட்டுக்கு முன் புதிய அமைச்சர்கள் நியமனம்

மொட்டு கட்சி எம்பிக்கள் சிலருக்கு எதிர்வருகின்ற வரவு-செலவுத் திட்டத்துக்கு முன் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானது முதல் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது.

அவர் ஜனாதிபதியான உடனேயே மொட்டின் 10 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குமாறு பசில் ராஜபக்சவால் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது. 02

## ஜனாதிபதி அலுவலகம் வாடகைக்கு



மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் ஜ 2010-2015 ஸ யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை ளுடுஜஜவு நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இது காங்கேசன்துறையில் 29 ஏக்கரில் இந்த மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதில் 12 ஏக்கரில் மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.மிகுதி 17 ஏக்கர் நிலம் மக்களிடம் இருந்து பெறப்பட்டது.

முதலில் இந்த 12 ஏக்கரை அந்த நிறுவனத்துக்கு குத்தகைக்கு 02



புதுசுடர்
www.puthusudar.lk
2023 OCTOBER 15 - SUNDAY

# முடிவுக்கு வருமா இஸ்ரேல்-காஸா சண்டை?

இன்று முஸ்லிம் உலகில் ஏற்பட்டிருக்கும் பேரழிவுகளில் ஒன்றுதான் இந்த காஸா-இஸ்ரேல் பிரச்சினை.இது ஒன்றும் புதிய பிரச்சினை அல்ல.யூதர்கள் என்று பலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து இஸ்ரேல் என்ற ஒரு நாட்டை பலவந்தமாக உருவாக்கிக்கொண்டார்களோ அன்றில் இருந்து உருவான பிரச்சினைதான் இது.

1948 இல் இஸ்ரேல் உருவானது முதல் ஒவ்வொரு நாளும் இஸ்ரேல் பலஸ்தீன மக்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறது.அவர்களின் இடங்களை ஆக்கிரமித்து வருகிறது.வீடுகளை அழித்து வருகிறது.அந்த மக்களை சிறையில் அடைத்து வருகிறது.

எஞ்சி இருக்கின்ற பலஸ்தீனத்தையும் கைப்பற்றி அருகில் உள்ள லெபனான்,சிரியா,ஜோர்தான் போன்ற நாடுகளின் இடங்களையும் கைப்பற்றி அகன்ற இஸ்ரேலை உருவாக்குவதுதான் யூதர்களின் திட்டம்.

அந்தத் திட்டத்துக்கு ஏற்பவே செயற்பட்டு வருகிறார்கள்.ஆனால்,இதில் இருந்து பாலஸ்தீனத்தை முழுமையாக மீட்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஹமாஸ் இயக்கம் உருவானது.

தனது அகன்ற இஸ்ரேல் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தடையாக இருப்பது இந்த ஹமாஸ்தான்.அதனால் ஹமாஸை அடியோடு அழிக்கும் நோக்கில் அவ்வப்போது அவர்கள்மீது தாக்குதல் நடத்தி வருகிறது இஸ்ரேல்.

இருந்தாலும்,அவர்களால் ஹமாஸை முற்றாக அழிக்க முடியவில்லை. அவர்களின் வளர்ச்சி அசூர வேகத்தில் செல்கிறது.

அவர்கள் காஸாவுக்குள் மாத்திரம் முடக்கப்பட்டாலும்கூட,இஸ்ரேலின் கண்காணிப்பையும் தாண்டி பல நாடுகளின் உதவிகள் அவர்களுக்கு கிடைக்கின்றன.

நிலத்தின் கீழ் ஓர் உலகத்தையே அமைத்து அவர்கள் போராட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ரொக்கட்கள் உள்ளிட்ட ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.இஸ்ரேல்மீது அவர்கள் நடத்திய 20 நிமிடங்களுக்குள் 5000 ரொக்கட் என்பது நினைத்துப் பார்க்க முடியாத வளர்ச்சி.

அப்படியென்றால் ஹமாஸிடம் இன்னும் எத்தனை ரொக்கட்கள் இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்தத் தாக்குதலால் 1200 இற்கு மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.பதிலுக்கு இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் காஸாவில் பேரவலம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல் உக்கிரமடைந்துள்ளது.தரை வழியாகவும் காஸாவுக்குள் நுழைவதற்கு இஸ்ரேலிய படை முயற்சி செய்கிறது. ஆனால்,சாத்தியமற்ற ஒன்று.

இதற்கு முன் இடம்பெற்ற பல சண்டைகளின்போதும் இஸ்ரேல் இவ்வாறு முயற்சி செய்து பின்வாங்கியது.இஸ்ரேல் காஸாவுக்குள் நுழைவதென்பது இஸ்ரேலுக்கு ஆபத்தானது.இதனால் வான் வழித் தாக்குதலை தீவிரப்படுத்தியே ஹமாஸை அழிப்பதற்கு முயற்சி செய்கிறது இஸ்ரேல்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஹமாஸ்/க்கு எதிராக இஸ்ரேல் சண்டை செய்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஹமாஸை அழிக்கிறோம் என்று கூறி மக்களை அழித்ததுதான்.இந்தத் தடவையும் அப்படித்தான்.

ஹமாஸை அழிப்பதென்றால் இஸ்ரேல் தரை வழியாகச் சென்றே ஆக வேண்டும்.இஸ்ரேலுக்கு இருக்கின்ற பயத்தால் அது சாத்தியமற்றது.அதனால் முடியுமானவரை மக்களைத்தான் அழிப்பார்கள்.அதைத்தான் செய்கிறார்கள்.

இந்த யுத்தம் என்பது இத்தோடு முடிந்து விடப்போவதில்லை.அது நீண்ட காலம் தொடரும் என்பது இஸ்லாமிய முன் அறிவுப்பு.

மஹ்தி அலை வருவார்கள்,ஈஷா நபி வருவார்கள் என்பது முன்னறிவுப்பு. அதுவரை இந்த சண்டை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும். அவ்வப்போது வேண்டுமானால் போர் நிறுத்தங்கள் ஏற்படலாம்.ஆனால்,சண்டை முற்றாக முடியப்போவதில்லை.

## நாமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடத்திய சந்திப்பின்போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

இருந்தும்,இந்த முடிவு அரசுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்று மொட்டு கட்சியின் வேறு சில எம்பிக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைப்பாடு மஹிந்த ராஜபக்சவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

## பட்ஜெட்டுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆனால்,ஜனாதிபதியோ இதோ தருகிறேன்,அதோ தருகிறேன் என்று கூறி இழுத்தடித்துக்கொண்டே செல்கிறார்.

இருந்தும், எதிர்வருகின்ற வரவு-செலவு திட்டத்துக்கு முன் அமைச்சுப் பதவிகளை வழங்காவிட்டால் அவர்கள் அதற்கு எதிராக வாக்களிக்கக்கூடும் என்று ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டதால் அவர் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**வருகின்ற கூட்டணி ரணிலை வேட்பாளராக நிறுத்துவதற்கான வேலையைச் செய்து வருகிறது.**

**அதேவேளை,பசில் ராஜபக்ஸவின் ஏற்பாட்டில் மொட்டின் வேட்பாளராக தம்மிக்க பெரேராவைக் களமிறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

**மொட்டு கட்சியின் ஆதரவில் ரணிலை ஜனாதிபதியாக்கிய போதிலும்,அவர் மொட்டு கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்தி அதில் இருந்து தனக்கென்றோர் ஆதரவு அணியை உருவாக்கும் முயற்சியை ரணில் ஆரம்பத்தில் இருந்தே மேற்கொண்டு வந்ததன் காரணமாகவே ரணிலை வேட்பாளராக நிறுத்துவதில்லை என்று மொட்டு கட்சி தீர்மானித்தது என அக்கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.**

**மொட்டு கட்சிக்கு ஆரம்பத்தில் ரணில்மீது ஓர் ஈர்ப்பு இருந்ததாகவும்-அவரை வேட்பாளராக நிறுத்துவதற்கான திட்டம் ஒன்று இருந்ததாகவும் தெரிவிக்கும் மொட்டு வட்டாரம் அவர் கட்சியை உடைக்கும் வேலையில் இறங்கியதால்தான் ரணிலை நிராகரிக்கத் தொடங்கியது என்கிறது.**

**நிமால் லான்சாவால் உருவாக்கப்பட்டு வரும் ரணிலுக்கு ஆதரவான கூட்டமைப்பை கலைத்துவிடுமாறு பசில் ராஜபக்ச அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து கோரிக்கை விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.**

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுவது என்றும் அடுத்த 17 ஏக்கரை அந்த மக்களுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் அதே நிறுவனத்துக்கே குத்தகைக்கு விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.









# கொலையாளிகளைக் காட்டிக் கொடுத்த சிகப்பு கார்

வெளிநாட்டு தொழில் வாய்ப்பை நாடி இலங்கையர்கள் படையெடுக்கும் காலம் இது.அதற்கு காரணம் நாட்டின் பொருளாதார நிலை.

வெளிநாடு சென்றால்தான் உயிர் வாழலாம் என்ற உண்மை இருப்பதால் தன்னிடம் இருக்கின்ற சொத்துக்களான வீடுகள்–நகைகள்–வாகனங்கள் –காணிகள் போன்றவற்றை விற்று அல்லது அடகு வைத்து வெளிநாடு செல்லும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறு விற்றும்–அடகு வைத்தும் அவர்களின் கனவு நிறைவேறாத சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு.

பலர் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். பலர் பொருத்தமான வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர்.

இன்னும் பலர் வெளிநாடு செல்லும் முன் இங்கு வைத்தே ஏமாற்றப்படுகிறார்கள்.

அவ்வாறு ஏமாற்றப்பட்டவர்கள் ஏமாற்றிவர்களுக்கு எதிராக பாரதூரமான முடிவுகளை எடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

அவ்வாறானதொரு விபரீதமான சம்பவத்தைத்தான் பார்க்கப் போகிறோம் இந்த ஆக்கத்தில்.

செப்டம்பர் 15 ஆம் திகதி.

கம்பஹா சீதுவ பொலிஸ் நிலையத்துக்கு வருகிறது தொலைபேசி அழைப்பு ஒன்று.

தடுகங் ஓயாவுக்கு அருகில் ஒரு பெரிய பயணப்பை.அதற்குள் ஒரு சடலம்.

இதுதான் அந்தத் தகவல்.

விரைகிறார்கள் பொலிஸார் அந்த இடத்துக்கு.

போய் பார்க்கிறார்கள்.

தகவல் உண்மைதான்.

நீல நிற நீண்ட பை.பயணப் பை.

அதற்குள் ஒரு சடலம்.ஆணின் சடலம். பழுதடைந்த நிலையில்...

பல இடங்களில் வெட்டுக் காயங்கள். அடி காயங்கள்.

35 வயது இருக்கும் அந்த சடலத்துக்கு.

கொல்லப்பட்டவர் யார்...? கொலையாளிகள் யார்...? எதற்காகக் கொல்லப்பட்டார் ...?

விசாரணை ஆரம்பம்.

அன்றைய தினமே...!!!

பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்கட்டுகிறது.

கொழும்பு பகுதியில் காணாமல் போனமைபற்றி ஏதும் முறைப்பாடு பதிவாகியுள்ளதா என்று தேடுகிறார்கள் பொலிஸார்.

இல்லை...

அப்படி எந்த முறைப்பாடும் இல்லை.

இதனால் அச்சடலம்பற்றி ஊடகங்களில் அறிவுப்பு செய்கிறார்கள் பொலிஸார்.

சீதுவ பொலிஸிற்கு விரைகிறார் ஒரு பெண்.இந்த அறிவிப்பைப் பார்த்ததும்...

அங்கிருந்து நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு.சடலம் வைக்கப்பட்டிருக்கும் அந்த இடத்துக்கு..

அடையாளம் காண்கிறார்.

ஆம்... அது அவரது சகோதரனின் சடலம்.

அவர் குடாவெவ ,மாஹாவெவ பகுதியைச் சேர்ந்த சுசந்த ரஞ்ஜித் ரணசிங்க.

வயது 36...

அடையாளம் காணப்பட்டுவிட்டார்.

அடுத்த விசாரணை..?

ஏன் கொல்லப்பட்டார்..யார் கொன்றார்கள் என்பதுதான்..

அவரது தொழில் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக ஆட்களை அனுப்புவதுதான்...

இதற்காக அடிக்கடி கொழும்புக்குச் செல்வார்.

இப்படித்தான் அன்றும் செல்கிறார்.

செப்டம்பர் 11 ஆம் திகதி...

எந்தத் தகவலும் இல்லை.அன்றிலிருந்து...

தொடர்ந்து விசாரிக்கிறார்கள் பொலிஸார். அவரின் உறவினர்களிடம்...

சுசந்தவுக்கு யாரும் எதிரிகள் உண்டா...?

உறவினர்களிடம் விசாரிக்கிறார்கள்.

ஆம்...

சில பிரச்சினைகள் உண்டு.

வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக சுசந்தவிடம் பணம் கொடுத்தவர்கள் இவருடன் சண்டை பிடிப்பதுண்டு.

இதனால் அவர் வீட்டில் தங்காது கொழும்புக்குச் செல்வதுண்டு.

இது. தொடர்பில்.பண மோசடி தொடர்பில் அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடுகள் உண்டா.?

ஆம்..

பல முறைப்பாடுகள்.பல பொலிஸ் நிலையங்களில்...

அந்த முறைப்பாட்டாளர்களில் யாராவதுதான் கொலையாளிகள்.

இப்போது பொலிஸ் விசாரணை அந்தக் கோணத்தில்...

உஉவள கமராக்களை சோதிக்கிறார்கள். சடலம் காணப்பட்ட இடத்தை ஒட்டிய ப்குதியில்.

அதில் சிக்குகிறது ஒரு காட்சி.

சிகப்பு நிறக் கார் ஒன்று செல்லும் காட்சி.

அப்படியே நோட் பண்ணுகிறார்கள் அதை.

சுசந்தவின் தொலைபேசி அழைப்புகளும் சோதனை.

தொடந்து விசாரிக்கையில் மேலும் கிடைக்கிறது ஒரு தகவல்.

அது கட்டான பகுதியில் இடம்பெற்ற ஒரு சண்டை.. சிலர் இந்த சுசந்தவை தாக்கிய சம்பவம் அது.

விரைகிறார்கள் பொலிஸார் அங்கு.

ஒரு ஹோட்டலுக்கு அருகில்தான் அந்த சம்பவம்.

சோதிக்கிறார்கள் அருகில் உள்ள உஉவள கேமராவை.

அங்கும் தென்படுகிறது அந்தக் கார். சிகப்பு நிறக் கார்.

சுசந்த கொல்லப்பட்ட இடத்தில் உஉவள இல் தென்பட்ட அதே கார்.

இந்த கார்தான் முக்கிய துப்பு.

ஊகிக்கிறார்கள் பொலிஸார்.

இந்தக் காரின் உரிமையாளர் யார்?

தேடுகிறார்கள் பொலிஸார்.

கண்டுபிடிக்கிறார்கள் அந்த உரிமையாளரை.

அவர் கட்டான ரெக்கதென பகுதியில் ஹோட்டல் ஒன்றை நடத்திச் செல்லும் ஒருவர்.

அவரது ஹோட்டலுக்கு அருகில்தான் அந்தச் சம்பவம் . சுசந்தவைத் தாக்கிய சம்பவம்.

உடனே அவர் கைது.

இந்த சம்பவத்தில் கைதான முதல் நபர்.

அவரிடம் தீவிர விசாரணை.

அவரிடம் இருந்துதான் கிடைக்கின்றன பல தகவல்கள்.

ஆம்...கொலையாளிகளில் அவரும் ஒருவர்.

சுசந்த வெளிநாடுகளுக்கு வேலைகளுக்கு ஆட்களை அனுப்பும் ஒரு முகவர்.

பலர் இவரிடம் பணம் கொடுத்து ஏமாந்துள்ளனர்.

அவ்வாறு ஏமாந்து போனவர்களில் இந்த வியாபாரியும் ஒருவர்.

அவருக்கு இரண்டு மகன்கள்.

ஒருவருக்கு ஜெர்மன் செல்வதற்கு ஆசை.. அடுத்தவருக்கு ஜப்பன் செல்வதற்கு ஆசை.

அதற்காகவே சுசந்தவை நாடி இருக்கிறார் இந்த வியாபாரி.

சுசந்தவை நம்பி 24 லட்சம் ரூபாவைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார்.

காலம் செல்கிறது.

கொடுத்த பணத்தை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திவிட்டார் சுசந்த.

தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்கிறார் அந்த வியாபாரி.

இதனால் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டிருக்கிறார்.

ஒரு தடவை அல்ல.பல தடவைகள்.

அனால்,சுசந்த வழங்கவில்லை. மறுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்,

அதுமட்டுமல்ல...

சுசந்த ஒரு மோசடி பேர்வழி என்பதும் அவருக்கு எதிராக பொலிஸில் பல முறைப்பாடுகள் இருப்பதும் இவர்களுக்குத் தெரிய வந்தது.

அந்த வர்த்தகர் சுசந்தவின் வீட்டுக்குச் தேடிச் சென்று எச்சரித்தார்.

பலரிடம் இவ்வாறு மோசடி செய்ததால் சுசந்த வீட்டில் இல்லை.

பல நாட்களாக தேடித் திரிகிறார் வர்த்தகர்.

இந்த நிலையில்,,,

11 ஆம் திகதி சிக்குகிறார் சுசந்த.கொழுப்பு புறக்கோட்டையில் வைத்து...

அன்றைய தினம்...

கொழும்பு செல்கிறார்கள். அந்த வர்த்தகரும் அவரது மகன்கள் இருவரும் ஹோட்டல் ஊழியர் ஒருவரும்.அந்த சிகப்பு காரில். புறக்கோட்டையில் வைத்து ஏதேச்சையாக சிக்குகிறார் சுசந்த.

கண்டதும் கோபப்படவில்லை

கூலாகப் பேசுகிறார்கள்.

அப்படியே ஏற்றிச் செல்கிறார்கள் கட்டான பகுதிக்கு. அங்கு..தாககொன்ன எனும் இடத்தில் ஒரு தென்னம் தோட்டம் இந்த வர்தகருக்கு சொந்தமானது..50 ஏக்கரில்..

அங்குதான் அழைத்துச் செல்கிறார்கள் சுசந்தவை.

அங்கு வைத்து பணம் கேட்டு அடிக்கிறார்கள் சுசந்தவை.

ஒருவாறு தப்பி ஓடுகிறார் அங்கிருந்து.

நுழைகிறார் அருகில் உள்ள ஒரு வீட்டுக்குள்.உயிரைப் காப்பதற்காக...

இருந்தும்,இவர்கள் விடவில்லை.

விரட்டிச் செல்கிறார்கள் பின்னால்.

நுழைகிறார்கள் இவர்களும் அந்த வீட்டிற்குள்...

எதுவும் தெரியாது வீட்டாருக்கு...

இதனால் எதிர்க்கிறார்கள் இவர்களை.

விளக்கிக் கூறுகிறார் வர்த்தகர் நடந்தவற்றை.

இவரை பொலிஸில் ஒப்படைப்பதாக அழைத்துச் செல்கிறோம் என்று கூறி இழுத்துச் செல்கிறார்கள் சுசந்தவை.

அவர்கள் அழைத்துச் சென்றது பொலிஸற்கு அல்ல அந்த வர்த்தகரின் ஹோட்டலுக்கு.

அப்போது சுசந்த அந்தத் தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்.

கிட்டத்தட்ட குறை உயிர்.

ஹோட்டல் அறையில் தள்ளி மீண்டும் தாக்குதல்.

இதானால் பிரிகிறது அவரது உயிர்.

அவர்களும் எதிர்பார்க்கவில்லை அவன் மரணிப்பான் என்று.

இப்போது என்ன செய்வது...?

உடலை எங்காவது கொண்டு போடுதல் என்று தீர்மானிக்கிறார்கள்.

அதன்படி,....

பயணப் பை ஒன்றுக்குள் புகுத்தி –அந்த சிவப்பு காரில் ஏற்றி எடுத்துச் செல்கிறார்கள் உடலை.

தடுகங் ஓயாவுக்கு அருகில் வீசுகிறார்கள்.

12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை அங்கேயே கிடக்கிறது அவ்வுடல்.

15ஆம் திகதி பகல்தான் சிலரின் கண்களில் படுகிறது. அந்த உடல் நீரில் மூழ்கி இருக்கும் என்றே கொலையாளிகள் நினைத்தனர்.

ஆனால்,நடந்ததோ வேறு.

இறுதியில்..

அணைத்து கொலையாளிகளை கைது செய்யப்படுகிறார்கள்.





**- ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக் -**

# துப்பறிவாளன்

## ஆறு மாதத்தில் சரி

கடந்த வாரம் ஜனாதிபதி நாடாளுமன்றம் சென்றபோது அரச எம்பிக்கள் அவரை சுற்றி வளைத்துக்கொண்டு உரையாடிக்கொண்டு இருந்தனர்.

பலர் பல முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

அதில் மதுர விதானகே எம்பி கூறினார்:

ஐ.நா கூட்டத்துக்கு எம்பிக்கள் சென்றது அரச செலவில் என்று எதிர்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டுகிறார்.

ஆனால்,அவர்தான் அரச நிதியை வீண்விரயம் செய்கிறார்.

வரவு– செலவுத் திட்டத்தில் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை 6 மாதங்களில் செலவு செய்துவிட்டார்.

இதுபற்றி ஆராய குழுவொன்றை அமைக்க வேண்டும். என்று கூறினார்.






## வேகமாக நடக்கும் எம்பி

கடந்த வாரம் எஸ்.பி.திஸாநாயக்க மிகவும் வேகமாக நாடாளுமன்றத்தை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தார்.

அப்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற ஊழியர் ஒருவர்.

“என்ன சேர்..கடும் வேகமா இருக்கு. ஒலிம்பிக்கில் ஓடப் போறீங்களோ “““ என்று கேட்டார்.

“நான் எப்பயும் இப்படித்தான்.சின்ன வயசுல இருந்தே வேகமாத்தான் நடக்குற..“““ என்று பதிலளித்தார் எஸ்.பி.

எஸ்.பி முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மாத்திரமல்ல முன்னாள் விளையாட்டு வீரரும்தான்.

அதனால்தான் அவர் எப்பவுமே வேகமாகவே நடப்பார் என்கிறது அவரது வட்டாரம்.

## நாமல் எப்போது ஜனாதிபதியாவார்?

மொட்டு கட்சியின் ருமேனியா கிளையின் தலைவர் சில நாட்களுக்கு முன் மஹிந்த ராஜபக்ஸவை சந்தித்தார்.

அவர் நாமல் பற்றி விசாரித்தார்.

“சேர்..நாமல் தலைமைத்துவத்துக்கு வருவதற்கு இன்னும் காலம் இருக்கு எண்டு களனி விகாரையில் வைத்து சொன்னீங்களே.அதுதான் உங்கட நிலைப்பாடா ? என்று கேட்டார்.

ஆமாம் என்றார் மஹிந்த.

“சேர்..உலகின் பல நாட்டுல இளம் வயது தலைவர்கள்தான் ஆட்சி செய்றாங்க.நாமலுக்கும் அந்த வாய்ப்ப வழங்கலாமே““ என்றார் அவர்.

“ நாட்டு மக்களும் கட்சியும் விரும்பினா அவர் நாட்டின் தலைவராகலாம் ““ என்று அதற்கு பதிலளித்தார் மஹிந்த.



## அமெரிக்காவில் நடையில் சென்ற ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐ.நா மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றார் அல்லவா.

ஒரு நாள் இலங்கை தூதரகத்தில் இருந்து ஈரான் ஜனாதிபதி தங்கி இருந்த ஹில்டன் ஹோட்டலுக்கு 2 கிலோ மீற்றர் நடந்து செல்ல நேர்ந்தது ரணிலுக்கு.

அவருக்கான வாகனம் உரிய நேரத்தில் வராமையே அதற்கு காரணம்.

ஐ.நா மாநாடு காரணமாக நிவ்யோர்க் நகரில் வாகன நெரிசல் அதிகம்.அதன் காரணமாகவே அவருக்கான வாகனம் வரவில்லை.

இதனால் ஜனாதிபதியுடன் சேர்ந்து அவரது மனைவியும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் நடந்தே சென்றனர்.



## மஹிந்தவுக்கு கடாபி கொடுத்த பரிசு

லிபியாவில் ஏற்பாட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அதிகமான மக்கள் உயிரிழந்தனர்.அவர்களுக்கு தனது கவலையைத் தெரிவிப்பதற்காக மஹிந்த ராஜபக்ஸ சில நாட்களுக்கு முன் இலங்கையில் உள்ள லிபியத் தூ தரகத்துக்குச் சென்றார்.

அங்குள்ள புத்தகத்தில் அவரது கவலையை–அனுதாபத்தைப் பதிவு செய்தார்.

அப்போது அங்குள்ள அதிகாரியிடம் கூறினார். கடாபி உயிருடன் இருந்திருந்தால் இப்படியான சந்தர்ப்பத்தில் லிபிய மக்களை துன்பத்தில் இருந்து காப்பாற்றி இருப்பார் என்று.

அதை முடித்துவிட்டு மஹிந்த வீடு திரும்பினார். அப்போது எம்பிக்கள் சிலர் அவரது வீட்டில் காத்திருந்தனர்.

லிபிய தூதரகத்துக்குச் சென்று அந்த மக்களுக்கான தனது அனுதாபத்தைப் பதிவு செய்துவிட்டு வருவதாகக் அந்த எம்பிக்களிடம் கூறினார் மஹிந்த.

அத்தோடு கடாபி–மஹிந்த உறவு தொடர்பில் மதுர விதானகே எம்பி கதையைத் தொடங்கினார்.


“சேர்..லிபியா போன நேரம் உங்களுக்கு கடும் வரவேற்பு என..““ என்றார்.

“ஓம்..ஓம்..அவர் அவரோட சீட்ல என்ன அமர்த்தினார்.அது பெரிய சீட்.ரெண்டு பேர் இருக்கக்கூடிய சீட். என்ன அவருக்கு பக்கத்துல உக்கார வச்சு தோளில் கை போட்டு போட்டோ எடுத்தார்..““ என்றார் மஹிந்த.

அப்போது இன்னொரு எம்பி கூறினார்.““சேருக்கு பெறுமதிமிக்க பரிசு ஒண்டும் தந்தாரே ..““ என்றார்.

“ஓம் அது ஒரு rolex watch. நான் போரை வென்றதுக்காக தந்தார். நாட்டுக்கு வந்து பிறகு சின்ன பழுது வந்தது.அத செய்றதுக்கு கம்பெனிக்கு அனுப்பினா அந்த watch கடாபிட பேர்ல பதிவாகி இருந்துச்சு.

அவர் சழடநஒ கம்பெனியோட கதைச்சு விசேஷமா எனக்கு செஞ்சி தந்தார்.““ என்று பெருமையாக கூறினார் மஹிந்த.



## புத்திக்க எம்பியை விரட்டிய சஜித்



எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா சில நாட்களுக்கு முன் மாத்தறைக்குச் சென்று பல கூட்டங்களில் கலந்துகொண்டார்.

தெவிநுவர துறைமுகம் உட்பட பல இடங்களில் அவரது சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அக்கூட்டங்களில் ஒன்று வெலிகம கப்பரத்தொட்ட மீனவத் துறைமுகத்தில் இடம்பெற்றது.அது அந்த மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயும் கூட்டம்.

அப்போது அவரது கட்சியின் மாத்தறை மாவட்ட எம்பி புத்திக பதிரன வந்து சஜித்தின் அருகில் அமர்ந்தார்.

இதைக் கண்டதும் சஜித்துக்கு கோபம் வந்துவிட்டது.

“இங்கிருந்து போங்க..என்ன வேல செய்ய உடுங்க..போங்க..போங்க...“

இப்படி புத்திகவை விரட்டினார்.

அவர் எதுவும் பேசாமல் மெல்ல எழுந்து சென்றுவிட்டார்.

“அவக ரெண்டு பேருக்கும் இடையில என்ன பிரச்சினையோ....“



## டயானாவின் ஆசையில் மண்

சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சுகவீனமடைந்து வெளிநாட்டில் சிகிச்சை பெற்று வந்த நேரம் அவரின் அமைச்சுக்கு பதிலமைச்சராக இராஜாங்க அமைச்சர் டயானா கமகவை நியமித்தார் ஜனாதிபதி.

அந்த நியமனம் வழங்கப்பட்டதோ கடந்த மாதம் 25ஆம் திகதி.

ஆனால்,அன்றைய தினமே ஹரினும் வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

ஐயோ டயானா பாவம்.ஒரு கேபினட் அமைச்சராக சில நாட்களுக்காவது இருந்து பார்க்கும் அவரது ஆசையில் வீழ்ந்தது மண்..

# அமானாவின் உரிமை வழங்கலுக்கு பங்குதாரர்கள் அனுமதி




அமானா வங்கியின் எதிர்வரும் உரிமைப் பங்கு வழங்கல் செயற்பாட்டுக்கு, வங்கியின் பங்குதாரர்கள் தமது அனுமதியை வழங்கியுள்ளனர்.

அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பொது ஒன்றுகூடலின் போது இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2,902,267,365 சாதாரண வாக்குரிமை பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குக்கும் 1 புதிய பங்கு வீதம், பங்கொன்றுக்கு ரூ. 2.30 எனும் அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடான ரூ. 20 பில்லியன் இருப்பைக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் வகையில், இந்த உரிமைப் பங்கு வழங்கலினூடாக ரூ. 6.7 பில்லியனை திரட்டுவதற்கு அமானா வங்கி எதிர்பார்த்துள்ளது.

பங்குதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஏதேனும் பங்குகளை, சகல மேலதிக உரிமை பங்கு வழங்கல் விண்ணப்பதாரிகளுக்கும் முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர், கோரப்படாத உரிமைப் பங்குகளை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் சட்ட அமைப்புகள் அடங்கலாக இதர நபருக்கு (களுக்கு) ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# ஆசிரியின் புதிய சுகாதார விஞ்ஞான அக்கடமி



இலங்கையின் தனியார் மருத்துவமனைகள் மற்றும் நோயறிதல் வசதிகளின் முன்னணி வலையமைப்பான ஆசிரி ஹெல்த், கட்டுப்படியான செலவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆரோக்கியப் பராமரிப்பு தகைமைகளை இளையோருக்குப் பெற்றுத்தரும் முன்னெடுப்பான புதிய விஞ்ஞான அக்கடமியை யுளசைச Academy of Health Sciences (AAHS) பெருமிதத்துடன் ஆரம்பித்து வைத்தது.

எல்லைகளை விரிவுபடுத்தும் வகையில், ஆசிரி ஹெல்த் ஆனது, அவுஸ்திரேலியாவின் Wollongong பல்கலைக்கழகத்தின் மலேசிய வளாகத்துடன் கூட்டிணைந்திருப்பதோடு, இளைஞர்களுக்கு உலகளவில் மிகவும் கேள்வியுள்ள ஆரோக்கியப் பாதுகாப்பு நிபுணர்களில் ஒருவராக மாறும் வழிகளை வழங்கி அவர்களை ஊக்குவிக்கிறது.

மதிப்புமிக்க உலக சுகாதார மற்றும் மனிதாபிமான அமைப்பின் அண்மைய Project HOPE செயற்திட்டமானது, “2030 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக 80 மில்லியன் சுகாதாரப் பணியாளர்கள் உலகுக்குத் தேவை“ எனக் குறிப்பிடுகிறது.

இந்த அதியுயர் கேள்வியானது சர்வதேச சுகாதார தொழிற்துறையை கட்டியெழுப்புவதால் கிடைக்கவுள்ள வாய்ப்புகளை தெளிவுபடுத்துகிறது இதற்கு மேலதிகமாக, இலங்கை தனியார் துறை தாதியர்கள் பெரும்பாலும் இலங்கை தாதியர் சபையில் பதிவினை மேற்கொள்வதில்லை.

# விளையாட்டுகளை மேம்படுத்தும் Emerald



இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான Emerald, Youth Sports Club உடன் இணைந்து, அதன் இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு பங்காளியாக, முதன்முதலாக ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் விளையாட்டு விழா வெற்றிகரமாக நிறைவடைந்தமையை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

உயன்வத்தை நூராணியா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த 900 மாணவர்கள் எனும் பெருமளவிலானோர் கலந்துகொண்டமையானது, உற்சாகம் மற்றும் தோழமை நிறைந்த சூழலை உருவாக்கியிருந்தது.

இது தொடர்பில் Emerald நிறுவன சந்தைப்படுத்தல் தலைவர் அஷ்கர் ஹுஸைன் தெரிவிக்கையில், "Youth Sports Club ஏற்பாடு செய்த இந்த குறிப்பிடும்படியான நிகழ்வுக்கு, இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு பங்காளியாக செயற்பட்டமை தொடர்பில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இளம் விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்திய ஆற்றலும் அவர்கள் கொண்டிருந்த ஆர்வமும் உண்மையிலேயே ஊக்கமளிக்கும் வகையில் இருந்தது. விளையாட்டை மேம்படுத்துவதற்கும், இளைஞர்களிடையே விளையாட்டுத்திறன் மற்றும் ஒற்றுமைக்கான கலாசாரத்தை வளர்ப்பதற்குமான எமது அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாகும்.

திறமையான இளைஞர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அவர்களை மேம்படுத்துவதற்குமான எமது பயணத்தின் தொடக்கத்தை இந்நிகழ்வு குறிக்கிறது. இந்த போட்டியை மாபெரும் வெற்றியடையச் செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உயன்வத்தை Youth Sports Club ஏற்பாட்டாளர்கள், தொண்டர்கள் மற்றும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.” என்றார்.

# சிறந்த பணி இடமாக DIMO




பாரிய அளவிலான பணியிட வகைகளின் கீழ், இலங்கையில் பணியாற்றுவதற்கான சிறந்த இடம் எனும், DIMO நிறுவனத்தின் சுட்டிக்காட்டத்தக்க 11 வருட தொடர்ச்சியான வெற்றிப் பயணம், மற்றும் GPTW இனால் ஆசியாவின் சிறந்த 100 பணியிடங்களில் ஒன்றாக அங்கீகாரம் பெற்றமை ஆகியன, அது கொண்டுள்ள பணியாளர் மதிப்பு முன்னுரிமைக்கான தெளிவான சான்றாகும். இது பணிகளை சுவாரஸ்யமாகவும் வெகுமதி மிக்கதாகவும் செய்வதை எடுத்துக் காட்டுகிறது.

இந்த மைல்கல்லைப் பற்றி, DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரதம மனிதவள அதிகாரியுமான தில்ருக்ஷி குருகுலசூரிய தெரிவிக்கையில், இத்தகைய வெற்றிப் பாதையைப் பேணுவதற்கு சிறந்த மனிதவள நடைமுறைகளைப் பேணுவதை கடந்து, ஊழியர்களின் திருப்தி மற்றும் ஈடுபாட்டிற்கான ஒரு மூலோபாய அணுகுமுறை அவசியமாகும் என்பதோடு, இது நிறுவனத்தின் பணியாளர் மதிப்பு முன்மொழிவை யதார்த்தமாக மாற்றுகிறது.

இந்த சாதனையின் அத்திவாரமாக நிறுவனத்தின் பணியாளர்கள் காணப்படுகின்றனர்.

துடிப்பான பணிச்சூழலையும், DIMO பழங்குடியினர் என அழைக்கப்படும் பணியாளர்களுக்குள் உள்ள ஆழமான உணர்வையும், அவர்களது பணிக் கலாசாரம் தொடர்பான சான்றுகள் பிரதிபலிக்கின்றன.

DIMO நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி (இரசாயன கலவைகள்) ரக்கித குணசேகர தெரிவிக்கையில், பெறுமதியில் மாற்றம் ஏற்படாமல் தங்களால் இயன்றதைச் செய்ய ஊழியர்களை ஊக்குவிக்கும் சூழலை, “வேலை செய்வதற்கு சிறந்த பணியிடம்“ என்பது வலியுறுத்துகிறது. இது ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. DIMO அவ்வாறனதொரு இடமாகும்.” என்றார்




# வீட்டுக் கடன்களை வழங்குவதற்காக HNB மற்றும் Homelands Skyline இணைவு புதுப்பிப்பு

நகர்ப்புற வாழ்க்கைக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, எதிர்கால கனவு வீட்டு உரிமையாளர்களுக்கு பலவிதமான நன்மைகள் மற்றும் முன்னுரிமை விலைகளை வழங்க, சொத்து மேம்பாட்டாளர் மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனமான Homelands Skyline உடனான தனது நீண்டகால கூட்டாண்மையை புதுப்பித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் இந்த மேம்பாட்டு நடவடிக்கையைப் பயன்படுத்திக் கொள்ளலாம், இது 2024 இறுதி வரை அதன் விரிவான அடுக்குமாடி கட்டட கோப்புரை முழுவதும் பொருந்தும். உடீே வுழறநசளஇல் கூட்டாண்மையைப் புதுப்பிக்கும் நிகழ்வில் HNB பிரதிப் பொது முகாமையாளர் – Retail Banking Group சஞ்ஜேய் விஜேமான்ன மற்றும் Home Lands குழுமத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் நலின் ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

”உலகளாவிய தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், இலங்கையில் ரியல் எஸ்டேட் துறைக்கான கண்ணோட்டம் 2023 ஆம் ஆண்டிற்கு சாதகமாகவே உள்ளது.

இந்தத் தொழில் பல சவால்களைச் சமாளிப்பதில் உறுதியுடன் உள்ளது. மேலும் ரியல் எஸ்டேட் ஆர்வலர்கள் மற்றும் வருங்கால வீட்டு உரிமையாளர்களுக்கு ஏராளமான முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் தொடர்ந்து செழித்து வருகிறது.

எனவே, சந்தையில் சிறந்த தேர்வுகளுடன் எங்கள் பரஸ்பர வாடிக்கையாளர் தளத்தை வழங்க உழஅநடயனௌ ளுமலடழைநெ உடனான எங்கள் நீண்டகால கூட்டாண்மையை புதுப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.” என HNBஇன் உதவிப் பொது முகாமையாளர் – தனிப்பட்ட நிதிச் சேவைகள், காஞ்சன கருணாகம தெரிவித்தார்.

# AyurEx 2023 இற்கு யூனிலீவர் அனுசரணை




2023 செப்டெம்பர் 08, 09, 10 ஆம் திகதிகளில் BMICH இல் நடைபெற்ற பாரம்பரிய மருத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் AyurEx Colombo 2023 சர்வதேச மாநாட்டிற்கான பிரதான அனுசரணையாளராக, யூனிலீவர் ஸ்ரீலங்காவின் முதன்மை வர்த்தக நாமமான டுநளநச யுலரளா பெருமையுடன் தனது ஆதரவை வழங்கியது.

அத்துடன், இம்மாநாட்டுக்கு இணையாக நடைபெற்ற கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சிக்கும் லீவர் ஆயுஷ் பிரதான அனுசரணை வழங்கியது.

இது 120 இற்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்களின் சமீபத்திய முன்னேற்றங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தியது.

Lever Ayush மற்றும் AyurEx Colombo 2023 ஆகியவற்றுக்கு இடையேயான மூலோபாய கூட்டாண்மையானது, பாரம்பரிய மருத்துவ அறிவை புத்தாக்கமான முறையில் நவீன சுகாதாரம் மற்றும் அழகுபடுத்தல் எண்ணக்கருக்களுக்குப் பயன்படுத்தும் அதே வேளையில், பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்துவதற்கான யூனிலீவர் நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

# உதவியாளர்கள் நியமனம்



மக்கள் வங்கியில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 500 வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பணிப்பாளர் சபை உறுப்பினர் மஞ்சுள வெல்லலகே மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் கூட்டுறவு மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்துடன் இணைந்து நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# Automobile.LK டிஜிட்டல் விவரக் கோவை அறிமுகம்

ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சி குழுமத்தின் வளர்ந்து வரும் சந்தைப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் ஈடுபாட்டு தீர்வுகளை வழங்கும் ளுடுவு டிஜிட்டல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால், ஒன்லைன் டிஜிட்டல் விவரக் கோவையான Automobile.LK அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வாகனங்களுடன் தொடர்புடைய சகல அம்சங்களுக்கும் இந்த டிஜிட்டல் கட்டமைப்பு அமைந்துள்ளது.

வாகனங்கள் தொடர்பான சகல தேவைகளையும் நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய உள்ளடக்கமான வாகன இணையத்தள கட்டமைப்பாக Automobile.LK திகழ்கின்றது.

பிந்திய தகவல்களை வழங்குவதற்கு மேலதிகமாக, வாகன சேவைகள் மற்றும் தொழிற்துறை விநியோகத்தர்கள் அடங்கலாக பரிபூரண உள்ளம்சங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், மையப்படுத்தப்பட்ட பகுதியாகவும் இந்த போர்டல் அமைந்துள்ளது.

ஒன்லைன் விவரக் கோவையான Automobile.LK, வாகன வர்த்தகங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சாதனமாக அமைந்துள்ளது. குறிப்பாக ஒன்லைன் கட்டமைப்பில் தமது பிரசன்னத்தை உறுதி செய்து, விளம்பரப்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும்.

வாகன வியாபாரங்களுக்கு தமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வெளிப்படுத்துவதற்கு அவசியமான Search Engine Optimization (SEO) வசதிகளைக் கொண்டிருப்பதுடன், தேடல் பெறுபேறுகளின் அடிப்படையில் சர்வதேச பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும் திறனையும் கொண்டிருக்கும்.

AUTOMOBILE.LK



# ரியல் எஸ்டேட் பிரிவில் புது யுகம்

இலங்கையிலுள்ள மாபெரும் ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான, ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் (JKP), தொழிற்துறையில் புத்தாக்கமான வழிமுறைகளை பின்பற்றி, மிகச் சிறந்த வாழிடப் பகுதிகளை உருவாக்கி பெருமளவில் பேசப்படும் நாமமாகத் திகழ்கின்றது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள மாபெரும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தனது பரந்தளவு வியாபாரப் பிரிவுகளுக்காக நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ளது. அதன் ரியல் எஸ்டேட் பிரிவில் JKP உயர்ந்த ஸ்தானத்தில் அமைந்துள்ளது.

உயர் ரக வதிவிட தொடர்மனைகளை நிர்மாணிப்பதற்காக புகழ்பெற்றுள்ள JKP, இலங்கையின் நகர வாழ்விடக் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.

The Emperor, The Monarch, 7th Sense, OnThree20, TRI-ZEN மற்றும் 4.5 மில்லியன் சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் Cinnamon Life ரிசோர்ட் ஆகியன புத்தாக்கம் மற்றும் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாக அமைந்துள்ளன.

வதிவிடத் திட்டங்களுக்கு மேலதிகமாக, நிறுவனம் ஊசநளஉயவ டீழரடநஎயசன ஆயடட, மொரட்டுவ மற்றும் ஜா-எல பிரதேசங்களில் K-Zone Malls மற்றும் கண்டி, திகன பகுதியில் Victoria Golf Resort ஆகியவற்றையும் செயற்படுத்துகின்றது.

இந்த கொல்ஃப் திடல், உலகின் 100 மிகவும் அழகிய கொல்ஃப் திடல்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதில் பிரத்தியேகமான காணிப் பகுதிகள் மற்றும் சொகுசான விடுமுறை இல்லப்பகுதிகள் போன்றனவும் அடங்கியுள்ளன.



# Coke Kottu Beat Party நிகழ்வு

இலங்கையின் உற்சாகமான கொண்டாட்டங்கள் மற்றும் திருவிழாக்களுக்கு மத்தியில், அண்மைக்காலமாக ஒரு நிகழ்வு குறிப்பாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த நிகழ்வுதான் அசத்தலான 'Coke Kottu Beat Party'.

இது Coca-Cola நிறுவனத்தின் உலக புகழ்பெற்ற ஒரு நடவடிக்கையான "Coke is Cooking" மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாகும். இலங்கையின் சமையல் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் போற்றும் இந்த நிகழ்வு, உள்ளூர் சமூக ஊடகங்களில் வைரலாக மாறி, நாடு முழுவதும் ஒரு முக்கிய பேச்சுப் பொருளாக மாறியுள்ளது.

Coca-Cola நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, மறக்கமுடியாத அனுபவங்களை உருவாக்குவதற்காகவே வடிவமைக்கப்பட்ட சுவை மற்றும் பொழுதுபோக்கின் ஒரு அங்கமாகும்.

இது நிகழ்வு ஏற்கனவே கம்பஹா, நீர்கொழும்பு, குருநாகல், மாத்தறை, வரக்காபொலை மற்றும் கண்டி ஆகிய ஆறு முக்கிய இடங்களில் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்ட 125,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் இதயத்தில் அருமையான இலங்கை உணவாக "கொத்து" உள்ளது. இது அனைத்து சுவைகளுக்கும் ஏற்ற தலைசிறந்த ஒரு சமையல் படைப்பாகும். இந்த நிகழ்வில், ஒவ்வொரு பகுதியின் தனித்துவமான சமையல் பாணியையும் பிரதிபலிக்கும் பல்வேறு வகையான கொத்து உணவுகள் தயாரிக்கப்பட்டன.

புதுச் சுடர் பத்திரிகையை உங்கள் மொபைகளில் பெற்றுக்கொள்ள
WWW.PUTHUSUDAR.LK எனும் இணையதளத்திற்குச் செல்லவும்

# LankaSign டிஜிட்டல் கையொப்பங்களை ஏற்றுக்கொள்ளும் DFCC




DFCC வங்கி தற்போது LankaSign ஊடாக இடப்படும் டிஜிட்டல் கையொப்பங்களை ஏற்றுக்கொள்வதுடன், இந்த சேவையை இலங்கையில் முதன்முதலாக வழங்கும் வங்கிகளுள் ஒன்றாகவும் மாறியுள்ளது.

உலகில் பல்கிப்பெருகிய முறையில் டிஜிட்டல் அடிப்படையிலான எதிர்காலத்தை நோக்கி நகரும்போது பாதுகாப்பான மற்றும் நம்பகமான வழிமுறையில் டிஜிட்டல் கையொப்பங்களின் தேவை மிகவும் முக்கியமானது.

DFCC வங்கி இந்தத் தேவையை இனங்கண்டு தனது வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் வங்கியுடன் தொடர்பாடுவதற்கு மிகவும் வசதியான மற்றும் டிஜிட்டல் ரீதியாக பாதுகாப்பான வழிமுறையை வழங்க LankaSign உடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

LankaSign ஆனது இலங்கையின் முன்னோடியான மற்றும் முன்னணி கொடுப்பனவு வலையமைப்பான LankaPay ஆல் இயக்கப்படுகிறது.

அதன்படி, LankaSign உடன் பதிவு செய்துகொள்ளும் DFCC வங்கி வாடிக்கையாளர்கள், DFCC வங்கிக்கு அனைத்து முறையான கோரிக்கைகள் மற்றும் பரிவர்த்தனைகளை இலகுவாக DFCC வங்கிக்கு அனுப்பி, அவர்களின் டிஜிட்டல் கையொப்பங்களை அங்கீகரித்து, சரிபார்க்கலாம்.

## துஷ்பிரயோகத்திலிருந்து முன்பள்ளி மாணவர்களை பாதுகாக்க ஹேமாஸ் நடவடிக்கை



அண்மைக் காலங்களில் சிறுவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளை கவனத்தில் கொண்டு, ஹேமாஸ் அவுட்ரீச் மையம் (HOF), இலங்கை குழந்தைநல வைத்தியர் கல்வியகம் மற்றும் சிறுவர் ஆரம்ப விருத்திக்கான தேசிய செயலகம் ஆகியவற்றுடன் கைகோர்த்து, நாடளாவிய ரீதியில் முன்பள்ளி சிறுவர்கள் மத்தியில் தம்மை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வந்துள்ளது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில், எமது சமூகத்தின் இளம் அங்கத்தவர்களை பாதுகாப்பது மற்றும் வலுவூட்டுவதற்கு அவசியமான சாதனங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தி சுவரொட்டி, குறு இசை மற்றும் வீடியோ ஆகியன அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

உலகளாவிய ரீதியில், நல்ல தொடுகை மற்றும் தீய தொடுகை தொடர்பான விழிப்புணர்வு, இளம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன், இந்த முக்கியத்துவம் வாய்ந்த தகவலை இலங்கைக் கொண்டு வரும் பணிகளை HOF தற்போது மேற்கொள்கின்றது.

துஷ்பிரயோகத்தை சிறார்கள் எதிர்நோக்கல், பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுகைகள், பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு முகங்கொடுத்தால், பெற்றோர்களை அல்லது நம்பிக்கைக்குரிய வயது வந்தவரை நாடல் போன்றன தொடர்பில் விழிப்புணர்வூட்டுவது இந்தத் திட்டத்தின் பிரதான இலக்காகும்.

### ஏற்றுமதி தொடர்பில்

# செலான் வங்கியின் விரிவான வங்கிச் சேவைகள்




தேசிய பொருளாதாரத்தின் பங்களிப்பாளர்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் (SME) முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

ஆற்றல்களை ஊக்குவிக்கும் வங்கியாக, செலான் வங்கி, ஏற்றுமதி சந்தையில்ளுஆநு முதலீடு செய்வதற்கான வாய்ப்பை அடையாளம் கண்டுள்ளது.

இந்தப் புரிதலின் அடிப்படையில், செலான் வங்கி பல ளுஆநுகளை உள்ள1Oர் சந்தையின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட வளர்ச்சியை அடைய ஊக்குவிக்கின்றது.

வங்கியின் "ஏற்றுமதி நிபுணர்" எனப்படும் மாற்றமிகு முன்முயற்சி, ளுஆநு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வங்கியால் வழங்கப்படும் ஆதரவை எடுத்துக் காட்டுகிறது.

குறிப்பாக ஊழளனைக்கு பிந்திய காலங்களில் தூண்டப்பட்ட சவால்கள் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலைகளில் செலான் வங்கியின் இந்த முயற்சி இத்துறையை மேலும் வலுவூட்ட உதவுகிறது.

"ஏற்றுமதி நிபுணர்", ஏற்றுமதி வர்த்தகத்தின் தனித்துவத் தேவைகளுக்கு ஏற்ற விரிவான மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட நிதித் தீர்வுகளை வழங்குகிறது.

இலங்கை அரசாங்கம் பொருளாதாரத்தை வலுப்படுத்த, ஏற்றுமதியை ஊக்குவித்து வரும் இவ்வேளையில் இந்தச் சேவை ஏற்றுமதியாளர்களுக்கு உலக அரங்கில் நம்பிக்கையுடன் காலடி எடுத்து வைக்க தேவையான அறிவு மற்றும் கருவிகளை வழங்குகின்றது.

# TEDxColombo "R-Evolution" நிறைவு



கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக நான்காண்டு இடைவெளிக்குப் பிறகு, TEDxColombo நிகழ்வு 2023 ஆகஸ்ட் 27 அன்று ஸ்ரீ ஜெயவர்தனபுர மொனார்க் இம்பீரியலில் ஒரு அற்புதமான வெற்றியுடன் மீண்டும் இடம்பெற்றுள்ளது.

"R-Evolution" எனத் தலைப்பிடப்பட்ட இந்த சாதனைமிக்க நிகழ்வானது, பார்வையாளர்கள் மீது மறக்க முடியாத நினைவுகளைப் பதித்த ஆறு உத்வேகமளிக்கும் பேச்சாளர்கள் மற்றும் இரண்டு ஆற்றல்மிக்க கலைஞர்களின் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டிருந்தது.

இந்த நிகழ்வில் TEDx Development, TED Conferences இன் உலகளாவிய பிரதிநிதியான வில் டேவிஸ் அடங்கலாக, தெற்காசிய பிராந்தியத்தைச் சேர்ந்த பிற வுநுனுஒ நிகழ்வு ஏற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

இது புரட்சியின் கருப்பொருள் மற்றும் நிலைபேண்தகு மாற்றம் மற்றும் மேம்பாட்டை முன்னெடுப்பதற்கான அதன் ஆற்றலை ஆராய பல்வேறு துறைகளில் இருந்து சிந்தனையாளர்கள், புத்தாக்குநர்கள் மற்றும் மாற்றங்களுக்கு வித்திடுபவர்களை ஒன்றிணைத்தது.

இந்த நிகழ்வு வழக்கத்திற்கு மாறான கண்ணோட்டங்களின் கொண்டாட்டமாக மட்டுமல்லாமல், தற்போதைய நிலையை சவால் செய்ய பங்கேற்பாளர்களின் நடவடிக்கைக்கான அழைப்பாகவும் இருந்தது.

# புதிய வகை இரட்டைத் திரை டபிவழி அறிமுகம்




2011ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப (IT) விநியோக சந்தையில் முன்னணி வகித்து வரும் IT Gallery Computers (Pvt) Ltd., இலங்கையில் Lenovo நுகர்வோருக்கும் மற்றும் கேமிங் ஆர்வலர்களுக்கும் சமீபத்திய புதிய தயாரிப்புகளை இன்று வெளியிட்டுள்ளது.

மிகவும் ஈர்க்கும் வகையிலான இரட்டைத் திரை (dual-screen) கொண்ட Yoga Book 9i மற்றும் புதிய கேமிங் மடிகணனியான LOQ ஆகியன இங்கு காட்சிப்படுத்தப்பட்ட தயாரிப்புகளில் உள்ளடங்குகின்றன.

இந்த அறிமுகத்தின் மூலம், இலங்கை சந்தையில் Lenovo நிறுவனத்தின் மிகவும் புத்தாக்கமான புத்தம் புதிய தயாரிப்புகளை வெளியிட்டு, தேசத்தை அதிவேக செயற்பாட்டுக்கு அழைத்துச் செல்ல IT Gallery Computers தயாராகியுள்ளது.

வெளிநாட்டு சந்தைக்கு அதிநவீன தொழில்நுட்பத்தை கொண்டு சேர்க்கும் Lenovo நிறுவனத்தின் உறுதிப்பாட்டை இந்த கூட்டாண்மை கோடிட்டுக் காட்டுகிறது.

Lenovo வர்த்தகநாமம், சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்த செயற்திறன் ஆகிய அம்சங்களைக் கொண்ட ஒப்பற்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

